DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Deposition of Witness

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் - திரு. பூபதி **PW-5** | வயது |
| த/க பெயர் | தொழில் |
| கிராமம் | தாலூக்கா |
| மாவட்டம் | |

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் தற்போது திருப்பூரில், 1.எண், இணை சார்பதிவாளராக, மாவட்ட பதிவாளர் நிலையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2004ம் வருடத்தில் அம்மாபேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வந்தேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உண்மை நகல்களை கொண்டு வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் உயில் சாசனம் அ.சா.ஆ.5 ஆனது 08.01.2004ம் தேதி அம்மாபேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் நான் அம்மாபேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணியில் இருந்தேன்.

2) மேற்படி ஆவணத்தை நான்தான் பதிவு செய்தேன். அவ்வாறு பதிவு செய்யும்போது, மேற்படி உயில் சாசனத்தை எழுதி வைத்தவரின் வாக்காளர் அடையாள அட்டை எண்.TN19/127/0246322 ஆவணத்தை பார்வையிட்டேன்.

மேற்படி ஆவணத்தை பதிவு செய்யும்போது சாட்சிகளாக ஏ.என்.குருசாமி என்பவரும், சேமலைக்கவுண்டர் என்பவரும், இன்னாரென்று நிரூபித்து, சாட்சிக் கையெழுத்து செய்தார்கள். மேற்படி ஆவணம் 08.01.2004 ம் தேதி மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அதன் பதிவு எண்.01/2004, 3 - புத்தகம் ஆகும். மேற்படி ஆவணத்தை எழுதிக் கொடுத்த குருசாமி கையெழுத்து செய்யவில்லை, கைரேகை தான் வைத்தார்.

3) மேற்படி உயிலை எழுதி வைத்ததாகக் கூறப்படும் நபரைப் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால், பார்த்தால் முடியும்(இவ்வழக்கின் 1 வது எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை). இந்த வழக்கில் இன்னரென்று நிரூபித்த சாட்சிகளைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்(4 மற்றும் 5 வது எதிரிகள் இன்று ஆஜரில் இல்லை). இந்த வழக்கு தொடர்பாக என்னை 2005 ம் வருடம் போலீசார் விசாரித்தனர். ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் பதிவு செய்தது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்ததை தெரிந்து கொண்டேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

4) அ.சா.ஆ.5 ல் இன்னாரென்று நிரூபித்தவர் கையெழுத்தை சரியாக உள்ளது என்று குறிப்பிட்டு கையெழுத்து செய்தது நான்தான் என்றால், சரிதான். அது அ.சா.ஆ.5 ல் இரண்டாவது பக்கத்தில் உள்ளது. பொதுவாக ஆவணங்களைப் பரிசீலனை செய்து, இன்னாரென்று உறுதி செய்த பிறகு தான், ஆவணங்களைப் பதிவு செய்வேன் என்றால், சரிதான். அ.சா.ஆ.5 ல் இரண்டாவது பக்கத்தில் உள்ள வாசகங்கள் என்னால் எழுதப்பட்டது. மேற்படி ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபர் அன்று அலுவலகத்திற்கு வந்திருந்தார் என்பதை உறுதி செய்த பிறகுதான் மேற்படி வாசகங்களை நான் எழுதினேன் என்றால், சரிதான்.

5) அ.சா.ஆ.5 ன் இரண்டாவது பக்கத்தில் உள்ள வாசகத்தில் ஏ.என்.குருசாமி, த/பெ. எனக் குறிப்பிட்டதில் உள்ள அடித்தலை நான் தான் திருத்தம் செய்து சுருக்கொப்பம் செய்துள்ளேன். வாசகங்களில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதை திருத்தி எழுதுவது வழக்கம் என்றால், பதிவு செய்வதற்கு முன்பு தவறு கண்டுபிடிக்கப்பட்டால் திருத்தம்

செய்வோம். பத்திரத்தில் காணப்படும் தரப்பினர்கள் எழுதிய வாசகங்களை நாங்கள் திருத்தம் செய்ய மாட்டோம். சில நேரங்களில் தவறுகள் கண்டு பிடிக்கப்படாமல் போவதற்கும் வாய்ப்பு உள்ளது என்றால், சரிதான். மேலும் அ.சா.ஆ.5 ன் இரண்டாவது பக்கத்தில் உள்ள தேதி, நேரம், ஆவண எண் ஆகியவை என்னால் எழுதப்பட்டவை என்றால், சரிதான். மேற்படி ஆவணம் பிற்பகல் 2 முதல் 3 வரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதை பதிவு செய்வதற்கு பதிவுக் கட்டணம் குருசாமி என்பவரால் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் முழுமையான ஆவணங்கள் சரிபார்ப்பிற்குப் பிறகுதான் மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**